பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: புரட்டாசி 21 (7—10—68) திங்கள் ★ வெளியூர்: புரட்டாசி 22 (8—10—68) செவ்வாய் [இதழ்: 92

நகராட்சிகளின் பதவிக் காலம்

தமிழ் நாட்டிலுள்ள 84 நகராட்சிகளின் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) பதவிக் காலம் அடுத்த ஆண்டு (1969) பிப்ரவரித் திங்கள் வரையில் நீடிக்கப்பட்டிருக்கிறது.

அக். 5-ம் நாளுடன் இந்த நகராட்சி உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிகிறது; தமிழக ஆளுநர் பிறப்பித்துள்ள உத்தரவின்மூலம் இவர்கள், அடுத்த ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28-ம் நாள் வரையில் பதவியில் இருப்பர்.

தந்தை பெரியாருக்கு நகரும் குடில் பரிசளிப்பு

பொன்னுடை போர்த்தி பொற்கிழி வழங்கினர்

விழாவில் அமைச்சர்கள் கருணாநிதி -- மதியழகன் பங்கேற்பு

கரூர், அக். 7—

தந்தை பெரியார் அவர்கட்கு சுற்றுப்பயணம் செய்வதற்கு வசதியான கார் (நகரும் குடில்) பரிசளிப்பு விழா, நேற்று இங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவையொட்டி நடந்த ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் அமைச்சர்கள் கருணாநிதி, மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நகருங்குடிலை அமைச்சர் கருணாநிதி வழங்கினார்; அமைச்சர் மதியழகன் பெரியாருக்குப் பொன்னுடை போர்த்திப் பொற்கிழி வழங்கினார்.

மழை கொட்டிக்கொண்டேயிருந்தும், ஊர்வலமும் பொதுக் கூட்டமும் சிறப்பாக நடந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் மழையில் நனைந்தவாறே விழாவில் கலந்துகொண்டனர்.

ஊர்வலம்

ஊர்வலத்தில் பெரியார் அவர்களும், உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்களும் அலங்கரிக்கப்பட்ட தேரில் அமர்ந்து வந்தனர்.

அடுத்து இராஜலிங்க மன்றத்தில் நடந்த பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்த அமைச்சர் மதியழகன் பெரியார் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தி ஆயிரத்தொரு ரூபாய் பணமுடிப்பை அளித்தார்.

அமைச்சர் கருணாநிதி

அடுத்து, பெரியார் அவர்களுக்குப் பொதுப் பணி அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் கார் பரிசளித்தார்; அதற்கு அடையாளமாகக் கார் ஆர். சி. புத்தகத்தைப் பெரியார் அவர்களிடம் வழங்கினார்.

கூட்டம் நடந்தபோதும் மழை பெய்து கொண்டே இருந்தது; இதை மனத்திற் கொண்டு கருணாநிதி அவர்கள் பேசுகையில், 'பெரியார் அவர்களுக்குக் கார் பரிசளிப்பதற்காகத்தான் இந்த விழா நடக்கிறது; 'கார்' என்றால் 'மழை' என்றும் ஒரு பொருள் உண்டு; இப்போது அந்தக் காரும் (தனைப்) பரிசாக அளித்துக்கொண்டிருக்கிறது' என்றார்.

தொடர்ந்து பேசுகையில், 'தி.மு. கழகத்தைப் பொறுத்தவரையில்—அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல்—பெரியாரால் வளர்க்கப்பட்ட பிள்ளைகளான நாங்கள், 1967-ல் அமைச்சரவை அமைத்து, அதையே அவருக்குப் பரிசாகக் கொடுத்து விட்டோம்; அவர் பல்லாண்டு வாழ வேண்டும்."

பெரியார்

பெரியார் அவர்கள் தம் உரையில் கூறியதாவது :—

"இன்றுள்ள நிலைமையில் தி. மு. கழகம்தான் நாட்டுக்கு நல்ல காரியங்களைச் செய்துவருகிறது; உறுதியான கொள்கைகளைக் கொண்டிருக்கிறது.

இதைத் தவிர வேறு எந்தக் கட்சியையும் ஆதரிப்பதற்கில்லை.

இதுதான் நான் பொதுமக்களிடம் வேண்டிக்கொள்வது."

மனித சமூகம் மன்னிக்காது

துரோகம் செய்ய முனைவோருக்கு எச்சரிக்கை

கழகத் தோழர்களுக்கு என்.வி. நடராசன் உருக்கமான வேண்டுகோள்

சென்னை, அக். 6—

"1949-ம் ஆண்டில் அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கும்போது, கொட்டும் மழையில் நின்றுகொண்டிருந்த நாம், 'ஊராட்சி உறுப்பினராகவோ, நகராட்சி மன்ற உறுப்பினராகவோ, நகராட்சித் தலைவராகவோ வருவோம்' என்று கனவுகூடக் கண்டதில்லை! இப்படிப் பதவிகளை எதிர்பார்த்தும் நாம் கழகத்தில் சேரவில்லை!

"ஆனால் இன்று ஊராட்சி உறுப்பினர்களாக இருக்கிறோம்; ஊராட்சித் தலைவர்களாக இருக்கிறோம்; மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக -- தலைவர்களாக -- அமைச்சர்களாக இருக்கிறோம் -- அறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு அளித்த அரசியல் தனிப் பண்பால்!

"அப்படிப்பட்ட அண்ணாவுக்கு நாம் மறந்தும் துரோகம் செய்தால் மனித சமுதாயம் நம்மை மன்னிக்காது!

"'அண்ணா' என்று முழங்கும்போது நீங்கள், 'வாழ்க' என்று முழங்குவதில் அன்பிருந்தால் -- அந்த அன்பில் உண்மையிருந்தால் -- அந்த மாபெரும் தலைவருக்கு -- தி.மு. கழகத்துக்கு சென்னை நகரம் முழுவதிலும் வெற்றியை ஈட்டித்தர வேண்டும்"

என்று, கழக அமைப்புச் செயலாளர் திரு. என்.வி நடராசன் எம்.எல்.சி. அவர்கள், சென்னை 71-வது வட்ட தி. மு. கழகத் தேர்தல் அலுவலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்; 'கழகம் நியமித்த வேட்பாளர்களை ஆதரித்துக் கழகத் தோழர்களும், கூட்டணி நண்பர்களும், வாக்காளர்களும் வெற்றி தேடித்தர வேண்டும்' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பதுக்கல் செய்யும் சமூக விரோதிகளுக்குச் சிறை!

தக்கவிதத்தில் சட்டம் இயற்றுவதற்குத் தமிழக அரசு முயற்சி

விலையேறுமலிருக்க முன்னேற்பாடான நடவடிக்கை

திருவள்ளூர், அக். 7—

"கடத்தல் -- பதுக்கல்களில் ஈடுபட்டுள்ளவர்களைத் தண்டித்துச் சிறைக்கு அனுப்பச் சட்டம் அவசியம்; அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவருவதுபற்றி தமிழக அரசு ஆராய்ந்துவருகிறது.

"எந்தப் பொருள்களின் விலை ஏறுகிறதோ அந்தப் பொருள்களைப் பதுக்கி வைத்து -- கணக்கில் காட்டாமல் விற்பனைக்குக் கொண்டுவரும் பதுக்கல் -- கள்ளச் சந்தைக்காரர்களைப் பிடித்துத் தண்டனை வழங்குவது -- அந்தப் பொருள்களைப் பறிமுதல் செய்வது -- ஆகிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு வசதியாகச் சட்டம் இயற்றுவது குறித்து அரசு பரிசீலனை செய்கிறது"

என்று சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், ஊத்துக்கோட்டையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"இந்த ஆண்டில் மழை சரியாகப் பெய்யாததால், விளைச்சல் நன்றாக இருக்காது; எனவே, இப்போதே உணவுப் பொருள்களைப் பதுக்கிவைத்து அவைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுத்தி, பின்னர் அவைகளை அதிக விலைக்கு விற்கலாம் என சிலர் கருதுகின்றனர்.

"எனவே, இந்தச் சட்டத்தின் மூலம் கள்ளச் சந்தை வியாபாரத்தையும், பதுக்கலையும் தடுக்க இயலும்; இதனமூலம் விலையேற்றத்தையும் கட்டுப்படுத்த முடியும்."

கொரில்லாப் பயிற்சியுடன் நாடு திரும்புகின்றனராம்

ஷில்லாங், அக். 7—

செஞ்சீனாவின் யூனான் மாநிலத்திலுள்ள பல்வேறு முகாம்களில், கொரில்லாப் போர் முறைகளில் சுமார் நாகர் கலகக்காரர்கள் பயிற்சி பெற்றிருக்கின்றனராம்.

அவர்களில் 1,400 பேர், நாகலாந்துக்குத் திரும்பும் வழியில் பர்மாவை அடைந்துள்ளனராம்.

எஞ்சியுள்ள 1,400 பேர்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

'அண்ணாவை கழக மேயர் வரவேற்க வேண்டும்'

மாநகர வாக்காளர்கட்கு கி. மனோகரன் வேண்டுகோள்

சென்னை, அக். 7—

"மகிழத்தக்க பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டியவர்கள் தி. மு. கழகத்தின் சார்பில் மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சென்றவர்கள்; அந்தச் சாதனைப் பட்டியல் தொடர -- அவர்கள் மேலும் பல நல்ல காரியங்களை நிறைவேற்றிட -- மீண்டும் தி. மு. கழகத்தின் வேட்பாளர்களையே மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

'அறிஞர் அண்ணா அவர்கள் தாயகம் திரும்பும்போது, கழக மேயர் மாலை அணிவித்து அவரை வரவேற்க வேண்டும் என்ற ஆசை, தலைநகரம் முழுவதும் பரவியுள்ளதை நான் உணருகிறேன்.

'கழக வேட்பாளர்கள் பெரும் பணக்காரர் அல்லர்; கூடியவரை, மக்களே அவர்களுக்கு உதவ வேண்டும்.

"மக்கள் அளித்திருக்கிற உதவியை ஏற்றிப் போற்றி, திருவிளக்காக -- சுடர் விளக்காக அணையாது காத்து வருவோர் கழகத்தவர்! தலைநகரில் உள்ள என் அண்ணன்மார்களை -- தம்பியரை -- தமக்கையரை வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன் -- கழக வேட்பாளர்களை ஆதரித்து வாக்களியுங்கள்!

"அக்டோபர் 27-ம் நாள் தேர்தல்! இதை நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்! உதயசூரியன் -- மக்கள் உள்ளமெல்லாம் பசுமையாகப் பதிந்துள்ள சின்னம் இது!"

என்று, நாடாளுமன்ற தி. மு. க. குழுத் துணைத் தலைவர் கி. மனோகரன் அவர்கள், 33-வது வட்டத்தில் இராணி—அண்ணா மன்றத்தின் சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக் காட்டிக் கேட்டுக்கொண்டார்.

ரூ. 3.47 கோடி மதிப்புள்ள பொருள்கள் பறிமுதல்

புதுடில்லி, அக். 7—

இந்த ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் சுங்க இலாகா அதிகாரிகள் சுமார் ரூ. 3.47 கோடி மதிப்புள்ள பொருள்களைப் பறிமுதல் செய்தனர்; அனைத்து நாட்டு விலைப்படி சுமார் ரூ. 49 இலட்சம் மதிப்புள்ள தங்கமும் இதில் அடங்கியிருந்தது.

சென்ற ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் சுமார் ரூ. 56 இலட்சம் மதிப்புள்ள தங்கம் உள்பட மொத்தம் சுமார் ரூ. 1.36 கோடி மதிப்புக்குப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 புரட்டாசி 21 (7—10—68) திங்கள்

தேசப் பிதாவின் நூற்றுண்டு

'உலக உத்தமர்' என்ற சிறப்புக்குரிய காந்தியடிகளின் நூற்றுண்டு, இத்திங்கள் இரண்டாம் நாளில் துவங்கியுள்ளது.

அகிம்சையை வாழ்க்கையின் அடிப்படை இலட்சியமாக மக்களுக்கு அறிவுறுத்திய புத்தருக்குப்பின், அதே விழுமிய இலட்சியத்தைத் தம் வாழ்நாள் முழுதும் கடைபிடித்து ஒழுகியவர் காந்தியடிகளாவார்.

கவர்ச்சிமிக்க சொற்களால் அகிம்சை இலட்சியத்தை விளக்கிக் கூறிய அளவுடன் காந்தியடிகள் இருந்திட்வில்லை.

தாம் வாழ்ந்த ஒவ்வொரு நாளும், தாம் ஈடுபாடு கொண்ட ஒவ்வொரு பணியிலும், அகிம்சா முறையையே பின்பற்றி அவர் செயல்பட்டு வந்தார்.

அகிம்சை இலட்சியத்திற்குள்ள பேராற்றலை -- சாதாரண மக்களும் புரிந்துகொண்டு கையாளத் தக்கவகையில் -- காந்தியார், தாம் மேற்கொண்ட பணிகள் வாயிலாக வெளிப்படுத்திவந்தார்.

எதற்கெடுத்தாலும் அஞ்சி அஞ்சிச் சாகும் கோழையிடம் காணக்கூடிய அகிம்சை அல்ல -- காந்தியாருடைய அகிம்சை!

மாவீரன் ஒருவனிடமிருந்து வெளிப்படும் அகிம்சையே காந்தியார் வெளிப்படுத்திய அகிம்சையாகும்!

இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் சுதந்தரம் -- முழு அளவுக்கு இல்லை என்றாலும் -- பெரும் அளவுக்கு, அகிம்சை முறையினாலேயே பெறப்பட்டிருக்கிறது என்பது வரலாற்று உண்மையாகும்.

அரசியல் சுதந்தரத்தை அமைதியான முறையில், இத்துணைக் கண்ட மக்களுக்கு மாற்றித் தந்த இங்கிலாந்து மக்களின் மனப்பண்பு, இத்தொடர்பில் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்துணைக் கண்டத்தின் விடுதலை இயக்கம், காந்தியார் நுழைவுக்குப் பின் புத்துயிர் பெற்று வீறுகொண்டு பெரும் சண்டமாருதமாக வீசத் தொடங்கியது.

விடுதலை இயக்கத்தின் தனிப் பெரும் தளபதியாகக் காந்தியார் பொறுப்பேற்றுக் கொள்ளுகின்ற வரையில், விரல்விட்டுக் கணக்கிடக்கூடிய கற்றறிந்த சிலரின் பொழுதுபோக்குப் பணியாகவே இருந்துவந்தது.

அப்போக்கை மாற்றியமைத்து, விடுதலை இலட்சியத்தை இலட்சக்கணக்கான மக்கள் விரும்பி ஏற்கத்தக்க உயர் இலட்சியமாகக் காந்தியார் உருவாக்கி விட்டார்.

காந்தியார் காட்டிய வழியில் வீரநடை போட்டுச் செல்லப் பெரும் பெரும் தலைவர்கள்தான் முனைந்தனர் என்பதில்லை.

அஞ்சி அஞ்சிச் சாகின்ற கோழைகளாய் -- தொடைநடுங்கிகளாய் -- மாமிசப் பிண்டங்களாய் -- நடைபிணங்களாய் வாழ்ந்து வந்த இலட்சக்கணக்கான மக்களை, நாட்டு விடுதலைக்காக எதையும் தாங்கிக்கொள்ளும் கர்மவீரர்களாய் மாற்றிவிட்டார் காந்தியார்!

இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலையைத் தேடித்தந்த அந்த அகிம்சாவாதியை—பகைவனிடத்தும் அன்பையே சொரிந்து வந்த அந்த உத்தமரை—தான் கொண்டிருந்த மதவெறியின் காரணமாகக் கயவன் ஒருவன் சுட்டுக்கொன்றுவிட்டான்.

உத்தமர் காந்தியார் நம்மைவிட்டுப் பிரிந்து ஏறத்தாழ இருபதாண்டுக்காலம் ஓடிவிட்டது.

எனவே, நம்மில் முதியவர்கள் நீங்கலாக இந்தத் தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்கள், காந்தியாரைக் கண்டதுமில்லை—அவர் கருத்துரையைக் கேட்டதுமில்லை.

நூல் வடிவில்தான் அவர் வாழ்ந்த அரிய வரலாற்றினையும், அவர் போதித்துவந்த விழுமிய கருத்துக்களையும் கற்றுணர்ந்து கொள்ளவேண்டிய நிலையில் இந்தத் தலைமுறையினர் வைக்கப்பட்டுள்ளனர்.

காந்தியடிகள், தம் வாழ்நாட்களில் கடைபிடித்துவந்த அறநெறிக் கருத்துக்கள் அனைத்தையும் இந்தத் தலைமுறையினர் கற்றுத் தெளியத்தக்க ஏற்பாட்டினை, உடனடியாகச் செய்தல் வேண்டும்.

இத்துறையில் இன்றுவரை எடுத்துக்கொண்டிருக்கின்ற நடவடிக்கைகளும், செய்துள்ள ஏற்பாடுகளும், விரும்பியது கைகூடச் செய்வதாக இல்லை.

காந்தியார், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுந்தான் சொந்தம் என்ற தவறான கருத்து, மக்களிடம் பரப்பப்பட்டுள்ளது.

இத்தவறான எண்ணம் மக்களிடம் பரப்பப்பட்டிருப்பதற்குப் பெரிதும் பொறுப்பானவர்கள், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களேயாவர்.

தங்களுடைய அரசியல் இலாபத்தைக் கருதியே காந்தியார் பற்றிய இத்தவறான கருத்தை, அன்றுதொட்டு இன்றுவரையில், திட்டமிட்டுக் காங்கிரசுக் கட்சியினர் பரப்பி வந்திருக்கின்றனர் என்பது உண்மையிலும் உண்மையாகும்.

இந்தியத் துணைக்கண்டத்துக்கு அரசியல் விடுதலை வாங்கித் தந்தவர் காந்தியார் என்றாலும், அந்த ஒன்றுடன் காந்தியார் நோக்கும் போக்கும் முற்றுப்பெற்றுவிடவில்லை.

காந்தியாரின் போதனை, கட்சி -- மதம் -- நாடு -- காலம் ஆகியவற்றைக் கடந்து, மக்கள் அனைவருக்கும் நல்வழி காட்டக்கூடிய விழுமிய ஒன்றாகும்.

'இக்காரணத்தினால்தான், இன்று உலக நாடுகள் அனைத்தும் காந்தியாரின் நூற்றுண்டுத் துவக்கத்தைச் சிறப்பாகக் கொண்டாடி, அவர் போதித்த உண்மைகளைப் பின்பற்றும் முயற்சியில் முனைந்துள்ளன.

'குறளுக்கு விளக்கமாகத் திகழ்ந்த பெரியார்'

'அறநெறிச் சான்றோர் வழியில் வீறுநடை போட்டவர்'

'இந்த நூற்றுண்டில் உலகம் உய்யக் கருத்துக்களைத் தந்தவர்'

காந்தி நினைவு மலர் வெளியீட்டு விழாவில் இரா. நெடுஞ்செழியன் புகழ்மாலை

சென்னை, அக். 7—

"காந்தியாரின் நூற்றுண்டு விழாவைக் கொண்டாடுகின்ற நேரத்தில், அவர் சொன்ன கருத்துக்கள் நம்முடைய வாழ்வில் எதிரொலிக்கச் செய்வதற்கு நாம் முனைய வேண்டும்!

'உலகைத் திருத்த உத்தமர்கள் பலர் உன்னதமான கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள்! அந்த வகையில், இந்த நூற்றுண்டில் உலகை உய்விக்கும் கருத்துக்களைத் தந்தவர் காந்தியடிகள்!

'காந்தியடிகள் போதித்த எளிமை -- அடக்க உணர்வு -- உண்மை -- நேர்மை -- நாணயம் -- அகிம்சை ஆகியவற்றை நாம் வாழ்வில் பின்பற்றி நடக்கவேண்டும்; அப்படிச் செய்வதுதான் அவரது நூற்றுண்டைக் கொண்டாடுவதற்குச் சிறப்பளிக்கும்"

என்று அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'மகாத்மா காந்தி' திரைப் படத்தையும், டாக்டர் இராதாகிருஷ்ணன் தொகுத்த காந்தி நினைவு மலரையும் வெளியிட்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது :--

"உலக மக்களின் நெஞ்சத்திலெல்லாம் நீங்கா இடம்பெறத்தக்க அளவுக்கு அண்ணல் காந்தியடிகள் அரும் பணி ஆற்றியிருக்கிறார்கள்.

அறியாமை மிகுந்த நாட்டை—வறுமை மிகுந்த நாட்டை—ஏதும் தெரியாத மக்கள் பெருகியிருந்த நாட்டை—அறிவு படைத்த -- ஆற்றல் படைத்த நாடாக்கிய பெருமை அண்ணல் காந்தியடிகளைத்தான் சாரும்!

'புதிய சமுதாய மாற்றம் காண வேண்டும்' என்று விரும்பிய அவரைக் கொடியவன் ஒருவன் சுட்டுக் கொன்றான்!

புதிய சமுதாயத்தை — புதிய நாட்டை—சாதிபேதமற்ற மக்கள் சமூகத்தைக் காண விரும்பினார் காந்தியார்!

'செயற்கரிய செய்வர் பெரியார்' என்ற குறளுக்கு முழு விளக்கமாகத் திகழ்கிறார் அண்ணல் காந்தியடிகள்!

மக்களின் மனப்போக்கை மாற்றி—அவர்களைச் சீர்திருத்தி நல்வழிப்படுத்தும் முறையில் அகிம்சைத் தத்துவத்தையும் போதித்தார்!

ஐரோப்பிய நாடுகளில் வாழ்வோரும், மற்ற கண்டத்தினரும் அறிவு பெறாத காலத்தில் இந்த மண்ணில் அறிவு சான்றோர்கள் தோன்றியுள்ளனர்!

சமுதாயத்திலுள்ள குறைபாடுகளைக் களையத் தம் வாழ்நாளை ஈந்து செயற்கரிய காரியங்களைச் செய்தவர் அண்ணல் காந்தியடிகளாவார்!

உலகத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரே இப்படிப்பட்ட சாதனைகளின் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள்!

"ஏழ்மை மிகுந்த இந்த நாட்டிலே வாழ்கிற மக்கள் மனநிம்மதியோடு இருக்க வேண்டுமானால், எளிமையைக் கடைபிடிக்க வேண்டும்" என்று போதித்தார்.

வாழ்க்கைக்குத் தேவை என்று கருதக்கூடியதை மட்டுமே பெற வேண்டும் என்று நினைப்பது தான் நிம்மதியை அளிக்கும்!

"என்னுடைய கடமையை ஆற்றிவிட்டேன்; உண்மையோடு --- நேர்மையோடு --- சொல்லியபடி ஆற்றிவிட்டேன்" என்று சிரித்துக் கொண்டே மறைந்தார்! அவர் மறைவு கேட்டு நாமெல்லாம் தவித்தோம் --- அழுதோம்! காந்தியடிகள் மறைவைக் கேட்டு அழுததுபோல் வேறெந்தத் தலைவர் மறைந்த போதும் உலகம் அழுததில்லை!

"ஓர் ஆதிக்கத்தை வெற்றி கொள்ளப் படைபலம்—வன்முறை—அதிகாரம் ஆயுதங்களால்தான் முடியும்" என்று கருதப்பட்ட நிலையை மாற்றி அறப்போர் முறையைக் கண்டு -- செயல்பட்டு -- வெற்றி பெற்றவர் காந்தியடிகள்!

'போர்' என்றாலே பிறரை வருத்துவதுதான்! ஆனால், 'அறப்போர்' என்பது, தன்னை வருத்திக்கொண்டு பிறரைத் தன் வழிக்கு மாற்றுவதாகும்!

கொடியவனுக்கும் தீங்கிழைக்காமல், தன்னுடைய வயிறு நோக நோக -- உடல் வருந்த வருந்த -- எதிரியின் மனதை மாற்றுவதில் வெற்றி கண்டவர் அண்ணல் காந்தியடிகள்!

அறநெறியைப் போதித்த சான்றோர்களின் வழியில் வீறுநடை போட்டவர் காந்தியடிகள்!

அவருடைய வாழ்க்கையைச் சித்தரிக்கும் படத்தை மிகச் சீரிய முறையில் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். காணுகின்றவர்களின் நெஞ்சிலெல்லாம் நிலை நிற்கக்கூடிய அளவுக்கு அண்ணலின் வரலாற்றைப் படமாக்கியிருக்கிறார்கள்!

உலகப் புகழ்பெற்ற கல்வி வல்லாரும் உலகப் பேரறிஞர்களில் ஒருவருமான முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களால், 'மகாத்மா—நூறு ஆண்டுகள்' என்ற நூல் தொகுக்கப்பட்டிருக்கிறது; 61 பேரறிஞர்கள் அண்ணல் காந்தியடிகளைப் பற்றி அருமையான கட்டுரைகளை எழுதி அளித்திருக்கிறார்கள்; காந்தியாரோடு நெருங்கிப் பழகிய பேரறிஞர்களின் சிறந்த கட்டுரைகளோடு டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின முன்னுரையும் சிகரம் வைத்தாற்போல் இடம் பெற்றிருக்கிறது!"

நீலகிரி மாவட்டத்தில் மின்சார உற்பத்தி

தமிழக அரசின் திட்டத்திற்கு ஒப்புதல் கிடைத்துவிட்டது

சென்னை, அக். 7—

நீலகிரி மாவட்டத்தில் மேற்கு நோக்கி ஓடும் பாண்டியாறு --- புன்னப்புழா ஆறுகளில் நீரைத் தேக்கி ஓர் இலட்சம் கிலோ வாட் மின்சாரம் தயாரிக்கும் தமிழக அரசின் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்குத் திட்டக் குழு ஒப்புதல் தெரிவித்துவிட்டது; திட்டத்திற்கான துவக்க வேலைகளைத் தொடங்கவும் அனுமதி கிடைத்துவிட்டது.

ரூ. 14.98 கோடி செலவாகும் இந்தத் திட்டத்தின் மூலம், தமிழக மின் இணைப்புக்கு ஆண்டுதோறும் 44.20 இலட்சம் யூனிட் மின்சக்தி கிடைக்கும்.

இத்திட்டத்தின் மூலம், வேலையற்றிருக்கும் எஞ்சினீயர்கள், தொழில் நுணுக்க நிபுணர்கள் ஆகியோருக்கும், மற்றும் தொழிலாளருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

ஏற்றுமதி உயருகிறது!

புதுடில்லி, அக். 7—

இந்தியா ஏற்றுமதி செய்யும் பொருள்களின் மதிப்பு 1947—48-ல் ரூ. 408.50 கோடியாக இருந்தது; 1967—68-ல் அது, ரூ. 1198.70 கோடியாக உயர்ந்திருக்கிறது.

ஏற்றுமதி உயர்வுக்கு இலகுரக எஞ்சினீயரிங் பொருள்கள் பெரிதும் உதவியுள்ளன.

அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரிட்டன் போன்ற தொழில் வளம் பெருகியுள்ள நாடுகளில் நம் நாட்டில் தயாரான சைக்கிள்கள், தையல் இயந்திரங்கள், பருத்தித் துணி வகைகள், எஃகுக் குழாய்கள் போன்ற பொருள்கள் விற்பனையாகின்றன.

நாட்டுப் பாதுகாப்பு நிதி

இந்த ஆண்டு செப்டம்பர் 28-ம் நாள் வரையில் நாட்டுப் பாதுகாப்பு நிதியில் ரூ. 80 கோடியே 87 இலட்சம் சேர்ந்திருக்கிறது. இதில், ரூ. 20 கோடியே 24 இலட்சம் 1965 செப்டம்பர் முதல்தேதிக்குப் பிறகு வழங்கப்பட்டதாகும்.

ரூ. 24 இலட்சத்து 74 ஆயிரம் கிராம் எடையுள்ள தங்க நகைகளும், ரூ. 15 இலட்சத்து 66 ஆயிரம் கிராம் எடையுள்ள வெள்ளி நகைகளும் நன்கொடையாய் வழங்கப்பட்டுள்ளன.

காந்தியாரின் போதனை, உலக மக்கள் அனைவருக்கும் வாழ்வளிக்கும் ஆற்றல் உடையதாகும்.

இப்படி உலக மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வளிக்கக்கூடிய அன்பு வழியைப் போதித்த காந்தி அண்ணலை, தங்களுக்கு மட்டுமே உரியவர் எனச் சொந்தம் பாராட்டிச் சிறுமைப்படுத்தும் குறுகிய போக்கைக் காங்கிரசுக் கட்சியினர், நூற்றுண்டுத் துவக்கத்திலிருந்தாவது விட்டொழிப்பார்களாக!

இந்தியத் துணைக்கண்டம் விடுதலை பெற்றதன் வாயிலாகக் காந்தியார் விருப்பத்தில் ஒரு சிறு பகுதிதான் வெற்றி பெற்றுள்ளது.

விடுதலை பெற்ற இத்துணைக்கண்டத்தில், காந்தியார் காண விரும்பிய சுயராஜ்யம், இன்று அமைந்திருக்கவில்லை; அதற்கான அடிப்படைகூட, இந்த இருபதாண்டுக் காலத்திற்குள் அமைக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கதும் வேதனை தரத்தக்கதுமாகும்.

இந்த அவலநிலை மாறவேண்டும் -- மாற்றப்பட்டே ஆகவேண்டும் -- அதற்குரிய ஆக்கப்பணியில் இன்று முதல் ஈடுபட, நாம் ஒவ்வொருவரும் சூளுரைத்துக்கொள்ள வேண்டும். இதுவே -- இது ஒன்றே, இறந்தும் இறவாப் புகழ்பெற்றுள்ள உத்தமர் காந்தியாருக்கு நாம் செலுத்தக்கூடிய நன்றிக் கடனாகும்.

—கா. க.

கொள்முதல் இலக்கு--கலெக்டர்கள் நம்பிக்கை

உணவு முனையில் காணும் வெற்றி பற்றி அமைச்சர் கே. ஏ. மதியழகன்

அரிசியின் தரத்தை உன்னிப்பாகக் கவனிக்குமாறு வலியுறுத்தல்

சென்னை, அக். 7—

“இந்த ஆண்டு டிசம்பர் 31-ம் நாளுக்குள், குறுவை அறுவடையின்போது 4.25 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய இயலும்’’ என்ற நம்பிக்கையுடன், தமிழக மாவட்ட கலெடர்களின் மாநாடு முடிவடைந்தது.

தற்போதுள்ள கொள்முதல் கொள்கை நீடிக்க வேண்டுமென்றும், உபரி நிலச்சுவான்தாரர்களிடம் கொள்முதல் தீவிரமாக்கப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

‘ஓர் ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்யக்கூடாது’ என்ற தமிழக அரசின் கொள்கையைத் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டை, வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் துவக்கி வைத்தார்.

உணவுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், மாநாட்டிற்குத் தலைமை தாங்கினர்.

மாநாட்டில், சல்வி—தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணநிதி, சட்டத் துறை அமைச்சர் செ. மாதவன் ஆகியோர் உயைாற்றினர்.

மாநாட்டில், அமைச்சர் சத்தியவாணிமுத்து, மா. முத்துசாமி, எஸ். ஜே. சாதிக்பாட்சா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கே. ஏ. மதியழகன்

தமிழக அரசின் தீவிர சாகுபடித் திட்டம்பற்றி உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் விளக்குகையில் குறிப்பிட்டதாவது:—

“தீவிர சாகுபடித் திட்டத்தின் பலனக உணவுத்தானிய உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது.

பங்கீட்டு முறை, குடும்பக் கார்டு முறை தமிழக மக்கள் தொகையில் 46-சதவிகிதத்தினருக்குப் பயனளிக்கிறது.

சுமார் 45-இலட்சம் மக்கள் ரூபாய்க்கு ஒரு படி அரிசி பெற்று வருகிறர்கள்.

128-இலட்சம் மக்கள் சந்தை விலையைவிடக் குறைவான விலைக்கு அரிசி பெற்றுவருகிறர்கள்.

சட்டபூர்வ பங்கீட்டு முறை அமுலில் உள்ள சென்னை நகரிலும், கோவையிலும் ரூபாய்க்குப் படி அரிசி போடப்படுகிறது; ஒன்பது மாவட்டங்களில் படி அரிசி ரூ. 1.17 விலைக்கும், மூன்று மாவட்டங்களிலும் ரூ. 1.22 விலைக்கும் அரிசி கிடைத்துவருகிறது; பிற மாவட்டங்களில் உள்ளவர்களும் மலிவு அரிசித் திட்டத்தை விரிவுபடுத்தக் கோருகிறர்கள்.

மலிவு அரிசித் திட்டத்தின்கீழ் பெரும் பகுதிகளில் சென்ற ஆண்டில் வழங்கியதைவிட ஒரு இலட்சம் டன் அதிக அரிசி வழங்கப்பட்டுள்ளது; 1967-ல் மாதம் ஒன்றுக்கு 50,000 டன் வழங்கப் பட்டுவந்தது; இப்போது 92,000 டன் வழங்கப் படுகிறது; அதாவது, ஆண்டுக்கு 7.5 இலட்சம் டன் வழங்க வேண்டியிருக்கிறது. இதனை நிர்வகித்து வர ஒரு இலட்சம் டன் கையிருப்பு வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த ஆண்டில் 9 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்தால் தான் மலிவு அரிசி வழங்கும் பொறுப்பை மேற்கொண்டு விரிவுபடுத்தாமலே இப்போதுள்ள அளவில் மலிவு அரிசித் திட்டத்தை நிர்வகித்து வர இயலும். புதிய பகுதிகளுக்கு மலிவு அரிசித் திட்டத்தை விரிவுபடுத்துவதென்றல், தானியக் கொள்முதலைத் தீவிரமாக்க வேண்டும்; கலெக்டர்கள் இதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.”

குடும்பக் கார்டு வழங்கும் முறையைக் குறிப்பிட்டு அமைச்சர் மதியழகன் கூறியதன் சுருத்து வருமாறு:—

“கலெக்டர்கள் கொள்முதலை அதிகரிக்கும்போது மொத்த உணவுத் தானிய விநியோகத் திட்டத்தையும் கவனிக்க வேண்டும். அதேபோல, குடும்பக் கார்டு திட்டம் சம்பந்தமான நிலையை மறுபரிசீலனை செய்தாக வேண்டும். செழிப்பாகவும் உணவு உற்பத்தி உயர்வாகவும் நியாய விலைக்கு அரிசி கிடைக்கக் கூடியதாகவும் உள்ள பகுதிகளில் குடும்பக் கார்டு முறைக்கு அவசியமிராது. இத்தகைய உதவி தேவைப்படாத பகுதிகளில் மலிவு அரிசி வழங்கும் பொறுப்பை ஏற்பது பொது நலனுக்கு ஏற்றதல்ல அவ்வாறு பொறுப்பேற்றல், இந்த உதவி தேவைப்படும் பகுதிகளைப் புறக்கணிப்பதில் கொண்டுபோய் விடும். இக்கருத்தை மனதில் கொண்டு, இப்பிரச்சினை முழுவதையும் ஆராய வேண்டும்.

மாநிலம் முழுவதிலும் 173 இலட்சம் பேர்களுக்கு நாம் மலிவான விலையில் அரிசி வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில், எந்த ஒரு மாவட்டத்தில் கொள்முதலில் துண்டு விழுந்துவிட்டால், அது, திட்டம் முழுவதையுமே பாதிக்கும் என்பதைக் கலெக்டர்கள் உணர்ந்து, சீரிய முறையில் கொள்முதல் திட்டத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஓர் ஏக்கருக்கும் குறைவான நிலமுள்ளவர்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு விலக்களிக்கப்பட்டுள்ளது; ஆனல், அவர்கள் தாங்களாகவே விற்க முன்வந்தால், கொள்முதல் செய்யலாமென்று யோசனை கூறப்படுகிறது. இந்த யோசனை ஏற்கப்பட்டால், நிர்ப்பந்தப்படுத்திக் கொள்முதல் செய்ததாகப் புகார்கள் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

கொள்முதல் செய்யும் நெல்லின் தரத்தையும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்: குறிப்பாகக் குறுவை கொள்முதலில், தரப் பரிசோதனை மிக முக்கியமான தாகும். மக்களுக்கு அரிசி ஒழுங்காகக் கிடைக்கச் செய்வதோடு மட்டுமன்றி, தரமான அரிசி தடையின்றி கிடைக்கின்ற நிலையையும் நாம் உறுதிப் படுத்த வேண்டும். நன்ருக உலர்த்திய நெல்லை ஆலைக் காரர்கள் அரைக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

கொள்முதல் செய்ததை எடுத்துச் செல்வதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க முன்னேற்பாடுகள் தேவையாகும்; போர் முயற்சிகள்போல் அவசரமாகவும், திறமையாகவும் இந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

பசியின் மீதும் பட்டினியின் மீதும் நாம் தொடுக்கும் போர் தான் இது! இந்தப் போரில், பண்பட்ட முறையில் நீங்கள் வெற்றி காண்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. உணவு முனையில் நாம் காணும் வெற்றி, மற்ற எல்லா வகை முன்னேற்றங்களையும் வரையறை செய்வதற்கு உதவும்!”

ஏ. கோவிந்தசாமி

வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி பேசுகையில் விளக்கியதாவது:—

“தமிழகத்தில் 8 இலட்சம் ஏக்கரில் அதிக விளைச்சல் தரும் நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

அதிக விளைச்சல் தரும் நெல் சாகுபடித் திட்டத்துக்குப் போதிய பாசன வசதி அவசியமாதலால், சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றி வைக்க வேண்டியது அவசியமாகும்.

குழாய்க் கிணறுகள் அமைக்கவும், பம்பு செட்டுகள் வாங்கவும் நிதி ஒதுக்க அரசு தயாராக இருக்கிறது. இந்தப் பணிகளுக்

(4 ம் பக்கம் பார்க்க)

சென்னை 4-வது வட்டம் நாவலர் படிப்பகம்

சென்னை 4-வது வட்டம் நாவலர் படிப்பகத்தின் நிர்வாகிகள் தேர்தல் 2—10—68-ல் வட்டச் செயலாளர் பி. கே. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம்:—

அவைத் தலைவர்: மதிவாணன்; செயலாளர்: த. இராமலிங்கம்; துணைச் செயலாளர்: டி. எஸ். மணி; பொருளாளர்: வி. எஸ். பரமசிவம்; செயற்குழு உறுப்பினர்கள் 9 பேர்.

பஸ் விலையில் மூன்றில் ஒரு பங்கு பாடி: பலரும் வருகின்றனர் டிவிஎஸ்ஸை நாடி.

காரணம் என்ன? இலேசான ஆனல் உறுதியான பாடிகள் அமைத்து, சிக்கனத்துக்கு வழிகாட்டுவது டிவிஎஸ்

ஒரு சேஸிஸ் விலை ரூபாய் 50 ஆயிரம் என வைத்துக்கொள்வோம். அதன்மீது நல்ல பஸ் பாடி அமைப்பதற்கு ரூபாய் 25 ஆயிரம் ஆகலாம். எனவே நீங்கள் செலவிடும் பணத்துக்குத்தக்க பெறுமதி வேண்டுமானல், பாடி கட்டும் பொறுப்பை டி வி எஸ்ஸிடம் ஒப்படையுங்கள்.

தேவைகள் கோடி; அவைக்கேற்றபாடி உங்கள் தேவைகள் எதுவாய் இருந்தாலும் அவைக்கேற்ற பாடிகள் அமைப்பதிலே நிபுணர்கள் டிவிஎஸ். நாற்பதாண்டுகளாகபாடி கட்டிவரும் பழுத்த அனுபவம் அவர்களுக்கு உண்டு. பலவித சேஸிஸ்மீது, பல்வகையான பாடிகள், பத்தாயிரத்துக்குமேல் கட்டியுள்ளனர். இலேசான, உறுதியான, ஆட்டமில்லாத, வசதியான பாடிகள்; டயர் தேய்மானமும் எண்ணெய்ச் செலவும் குறையும். எந்தவிதமான கரடுமுரடான சாலைகளையும்சமாளிக்கும். முதல்தரமான ஸ்டீல், மரம் முதலியவற்றையே உபயோகிப்பதால், நீண்டகாலம் உழைக்கும்.

உங்கள் சேஸிஸ் எது? அசோக் லேலாண்டு கோமெட், பெட்போர்டு, டாட்ஜ், பார்கோ, டாடா மெர்ஸிடீஸ்-பென்ஸ், வில்லீஸ் ஜீப் அல்லது ஸ்டாண்டர்டு 20?

உங்கள் தேவை என்ன? முழு அலுமினிய பஸ், மினி பஸ், உல்லாச பஸ், எக்ஸ்பிரஸ் வான், டெலிவரி வான், பிக்-அப்-வான், அம்புலன்ஸ் வான், மூடிய அல்லது திறந்த லாரி, முழு ஸ்டீல் பஸ், டிப்பர் அல்லது வேறென்ன? எதுவாய் இருந்தாலும் சரி, சிறந்த முறையில் பாடி கட்டும் ஸ்தாபனம் டிவிஎஸ்.

உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்—மதுரை

இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்

TVS



TVS 4694

தமிழ் எழுத்தாளர்கள் வாழ்வு உயர அரசு உறுதுணை புரியும்

அமைச்சர் நெடுஞ்செழியன் உறுதி

புதிய சொற்களை --- கருத்துக்களை உருவாக்கித் தர வேண்டுகோள்

சென்னை, அக். 7—

"தமிழக அரசு, நல்ல தமிழ் அரசாகத் திகழத் தமிழ் எழுத்தாளர்கள் உறுதுணையாக இருக்கவேண்டும்; புதுப் புதுத் தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடித்துக் கொடுக்கவேண்டும்; சிந்தித்துச் சிந்தித்துப் புதிய கருத்துக்களை விளக்கிக் காட்டவேண்டும்; புவியியல், வானவியல், அறிவியல் துறைகளுக்கான புதிய சொற்களை — கருத்துக்களை உருவாக்கித் தரவேண்டும்.

"இந்தத் தலைமுறையில் பல புதிய சொற்களை உருவாக்கினால், அடுத்து வரும் தலைமுறையினருக்கு அவை உதவியாக இருக்கும்; மேலும் அவர்களும் பல புதிய சொற்களைக் கண்டு பிடிப்பார்கள்.

"இந்த வகையில், தமிழ் எழுத்தாளர்கள் அரசுக்கு உறுதுணையாக இருப்பார்களானால், தமிழின் வளம் பெருகும்; தமிழ் எழுத்தாளர்களின் கோரிக்கைகளையும் குறைபாடுகளையும் கவனித்து ஆவன செய்ய இந்த அரசு எப்போதும் ஆயத்தமாக இருக்கிறது.

"அமைச்சரவையில் உள்ள நாங்களெல்லாம் எழுத்தாளர்களாக இருப்பதுபற்றி இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்; நானும் ஓர் எழுத்தாளன் என்ற முறையில் உங்களோடு உட்கார்ந்து உங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்கவும் என்னாலான யோசனைகளைத் தெரிவிக்கவும் ஆயத்தமாக இருக்கிறேன்"

என்று, கல்வித் துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இன்று, தமிழ் எழுத்தாளர் சங்க விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்குக் கட்டிடம் கட்டுவதற்கான தொடக்க முயற்சிகளை சங்கம் மேற்கொண்டால், அதற்கு அரசின் சார்பில் நிதி உதவ ஆவன செய்வதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

இசை--நாடகத் துறையில், ஓய்வுபெற்ற கலைஞர்கட்கு உதவியளிக்கும் இந்திய அரசின் திட்டத்தில், எழுத்தாளர்களையும் சேர்த்துக்கொள்ளச் செய்யத் தாம் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாகவும் அமைச்சர் அறிவித்தார்.

தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காந்தி—பாரதி—வ. உ. சி. நாள் விழா, திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் ந. சஞ்சீவி தலைமைவகித்தார். சங்கப் பொதுச்செயலாளர் திரு. கோ. பன்னீர்செல்வம் வரவேற்புரையாற்றினார்.

'பாரதியும் எழுத்தாளனும்' என்ற தலைப்பில் திரு. இரா. சுராஜ்; 'காந்தி கண்ட எழுத்தாளன்' என்ற தலைப்பில் திரு. சு. வேம்பு; 'பாரதியும் காந்தியும்' என்னும் தலைப்பில் திரு. மா. சு. சம்பந்தம்; 'நடிகனும் எழுத்தாளனும்' என்ற தலைப்பில் நடிகமணி டி. வி. நாராயணசாமி ஆகியோர் பேசினர்.

இறுதியாக, 'எழுத்தாளரும் தமிழக அரசும்' என்ற தலைப்பில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் சிறப்புரையாற்றினார்.

சங்கத் துணைச் செயலாளர் சிறுவை மோகனசுந்தரம் நன்றி கூறினார்.

விழாத் துவக்கத்தில் திருமதி பாரதி, தமிழ்த் தாய் வணக்கம் பாடினார்.

இக்கூட்டத்தில் வங்கத் தமிழர் சங்கத் துணைச்செயலாளர் திரு. செ. வீரபத்திரனும் கலந்து கொண்டார்.

சங்கத்துக்கெனச் சொந்தக் கட்டிடம்

சங்கப் பொதுச்செயலாளர் திரு. பன்னீர்செல்வம் சங்கத்துக்கெனச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு உதவி செய்யவேண்டும் என்றும், காந்தி அமைதி நிறுவனத்தாருக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 5,000 கொடுத்திருப்பதுபோல் எழுத்தாளர் சங்கத்துக்கும் உதவவேண்டும் என்றும், நிலையான கட்டிடம் அமையும்வரை, மவுண்ட்ரோடு அரசினர் தோட்டத்தில் உள்ள பழைய சட்டமன்ற விடுதியில் ஓர் அறை இலவசமாகவோ, குறைந்த வாடகையிலோ ஒதுக்கித் தரவேண்டும் என்றும் அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் உறுதி

இதற்கு அமைச்சர் பதிலளித்துப் பேசுகையில், தம்மால் முடிந்த வரையில் எழுத்தாளர் சங்கக் கட்டிடம் உருவாக உதவுவதாகக் குறிப்பிட்டு, முன் முயற்சிகளைத் துவங்குமாறு சங்கத்தினரைக் கேட்டுக்கொண்டார்.

நகரில் புறம்போக்கு நிலமோ' மாநகராட்சிக்குச் சொந்தமான இடமோ எங்கேனும் இருக்குமானால்---தேடிக் கண்டுபிடித்துச் சொன்னால் அதைப் பெற்றுத் தரத் தாம் முயற்சி செய்வதாக உறுதியளித்தார். அப்படிப்பட்ட இடம் எங்கே இருக்கிறது என்று தேடிக் கண்டுபிடிக்கவும்கூடத் தாம் உதவி செய்வதாகவும் கூறினார்.

இடம் கிடைத்தபின் கட்டிடம் உருவாக—அரசின் நிதி நிலையும், சட்டமும், எந்த அளவுக்கு இடம் கொடுக்குமோ அந்த அளவுக்கு—நிதி உதவத் தாம் ஆவன செய்வதாகவும் கூறினார்.

கட்டிடத்துக்குத் தேவையான தொகை முழுவதையும் அரசே கொடுக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது என்றும் அவர் கண்டிப்பாகத் தெரிவித்தார்.

வடாற்காடு மாவட்ட தி.மு.க. தேர்தல்முடிவுகள்

29—9—68-ல் வேலூர் டவுன் ஆலில் தலைமைக் கழக ஆணையாளர் திரு. சி. சிட்டிபாபு எம்.பி. அவர்கள் தலைமையில் நடைபெற்ற வடாற்காடு மாவட்டக் கழகத் தேர்தல் முடிவுகள் வருமாறு:—

அவைத் தலைவர்:
பாபு சனார்த்தனம்

செயலாளர்:
தோப்பூர் திருவேங்கடம்

துணைச் செயலாளர்:
எஸ். கே. ரசாக்

பொருளாளர்:
செல்வரசு

பொதுக்குழு உறுப்பினர்கள்:
எஸ் முருகையன் எம்.எல்.ஏ.
சி. பி. சிற்றரசு எம்.எல்.சி.
ப. உ. சண்முகம் எம்.எல்.சி.
கே. பி. ஆறுமுகம்
ஏ. கே. துரைசாமி
எம். கோதண்டம்
பி. எம். தேவராசு
டி. ஏ. மணி
வி. எஸ் பாண்டியன்
டி. கே. கோவிந்தசாமி
கே. எம். ஏ. அப்துல்
ஏ. வி. அறிவழகன்

கொள்முதல்: கலெக்டர்கள் நம்பிக்கை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சான கடனுதவிகள் நில அடமான பாங்கிகள், விவசாயத் தொழில் உதவி கார்ப்பரேஷன் ஆகியவற்றின் மூலம் வழங்கப்படுகின்றன.

இந்தக் கடனுதவிகள் கிடைப்பதில் தாமதங்கள் ஏற்படுவதாகப் புகார்கள் இருந்துவந்ததால், ரிஜிஸ்திராருக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதற்காக அண்மையில் நில அடமான பாங்கிகள் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டன; இதற்கும் எதிர்பார்த்த பலன் கிடைத்ததாகத் தெரியவில்லை; கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவாகவே கடன்கள் அளிக்கப்பட்டுள்ளன.

புதிய கிணறுகள் வெட்டுவதற்காகவும், பம்பு செட்டுகள் வைப்பதற்காகவும், ரூ. 12 கோடி கடனுதவி வழங்க மாநில அரசு உத்தேசித்துள்ளது; இதுவரை ரூ. 3 கோடி முதல் ரூ. 4 கோடி வரைதான் வழங்கப்பட்டுள்ளது. பம்பு செட்டுகள் பொருத்துவதில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணம், மின்சார போர்டினிடம் போதிய நிதி வசதி இல்லாததுதான் என்று கூறப்படுகிறது; இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு விவசாயத் தொழிலுதவி கார்ப்பரேஷனும், நில அடமான பாங்கியும் சேர்ந்து, ஒவ்வொரு மனுதாரருக்கும் அதிகபட்சம் ரூ. 3,000 வரை அதிகமாகக் கடனுதவி அளிக்க முன்வந்துள்ளன."

மு. கருணாநிதி

பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அதிக விளைச்சல் தரும் பயிர்கள் சாகுபடித் திட்டத்தை நிறைவேற்றுவதில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிப்பது அவசியமாகும்.

கொள்முதலுக்கு நாம் முக்கியமாக தஞ்சை மாவட்டத்தையே நம்பிக்கொண்டு இருக்கிறோம்; தஞ்சையை மட்டும் நம்பாமல் மற்ற மாவட்டங்களிலும் கொள் முதலை தீவிரப்படுத்த வேண்டும்

மதுரை, இராமநாதபுரம், தர்மபுரி, வட ஆற்காடு மாவட்டங்களில், திட்டமிட்டதில் பாதி அளவுதான் கொள்முதல் ஆகி உள்ளது; இது மகிழ்ச்சிக்குரியது அல்ல.

கொள்முதலின் அடிப்படைக் கூறுகளை ஆராய்ந்து நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விவசாயத்தைப் பெருக்க கால்வாய்களைச் சீரமைக்க வேண்டும்.

நாட்டின் விளைச்சலில் ஐந்தில் ஒரு பகுதியைத்தான் அரசு கொள்முதல் செய்கிறது என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்லி, கொள்முதல் இலட்சிய அளவுகளை நிறைவுசெய்ய மாவட்டக் கலெக்டர்கள் முனைய வேண்டும்."

செ. மாதவன்

கூட்டுறவுத் துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"புதிய கிணறுகள் வெட்டவும், பம்பு செட்டுகள் அமைக்கவும், கூட்டுறவு நில அடமான பாங்கியின் மூலம் ரூ. 12-கோடி விவசாயிகளுக்குக் கடன் வழங்கவும் வேண்டுமென்பது மாநில அரசின் திட்டமாகும்; இதுவரையில் இதில் 3-கோடி 75 இலட்சம் ரூபாய் மட்டுமே கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்டிருக்கும் கடன் தொகை முழுவதையும் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள கலெக்டர்கள் வழி வகை செய்யவேண்டும்; அப்படிச் செய்தால் வரும் ஆண்டில் விளைச்சல், பொதுவாகக் கூடுதலடையும் என நம்புகிறேன்."

இரா. நெடுஞ்செழியன்

கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சென்ற ஒன்றரை ஆண்டுகளில் காவல்துறையினர் சுமார் ரூ. 73 இலட்சம் மதிப்புள்ள உணவுத் தானியங்களைக் கள்ளக் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

கள்ளக் கடத்தலைத் தடுக்கும் ஏற்பாடுகள் இன்னும் மும்முரமாக நடைபெற வேண்டும்.

மூன்று போகம் சாகுபடியாகக் கூடிய இடங்களில், பம்பு செட்டுகளுக்கு முன் சலுகை கொடுத்து மின் இணைப்பு தர வேண்டியது அவசியமாகும்.

தமிழ்நாட்டில் ஐந்தரை இலட்சம் கிணறுகள் இருக்கின்றன; இதில், மூன்றரை இலட்சம் கிணறுகளுக்கு மின்சாரத் தொடர்பு தரப்பட்டிருக்கிறது.

ஆண்டுதோறும் 20,000 கிணறுகள் தோண்டப்படுகின்றன; இவைகளுக்கு மின்சாரத் தொடர்பு தருவதற்கு 11-ஆண்டுகள் ஆகும்; இதற்கு மத்திய அரசிடமும், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமும் கடன் கேட்டிருக்கிறோம்; நாம் விரும்பும் அளவுக்குக் கடன் கிடைத்தால், கிணறுகளுக்கு மின்சாரம் தருவதை விரிவுபடுத்துவோம்."

பர்மா அகதிகளின் பரிதாப நிலை

தமிழக அரசு அளிக்கும் ஆறுதல்

சென்னை, அக். 7—

பர்மிய அரசின் தீவிர சோஷலிசக் கொள்கையால் பாதிக்கப்பட்டு அங்கிருந்து வெளியேற்றப்படும் தமிழ் மக்கள், மேலும் தமிழகத்திற்கு வந்தவண்ணமுள்ளனர்.

1964-லிருந்து இவ்வாறு சென்னைக்கு 'அகதி'களாக வந்தவர்களின் எண்ணிக்கை 1,01,050 ஆகும்.

பர்மாவிலிருந்து 'அகதி'களாகத் திரும்பும் அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு இழைக்கப்பட்ட 'அநீதி'களை, 'சோகக் கதை'களாகக் கூறிக்கொண்டிருக்கின்றனர்; பிழைப்பையும் இழந்து -- அதற்கான சாதனங்களையும் பறிகொடுத்துத் திரும்பும் அவர்களுக்குத் தமிழக அரசு உரிய முறையில் ஆறுதல் அளித்து வருகிறது.

பெரும் வேதனையுடனும், தாங்கொணத் துயருடனும் வந்துள்ள அவர்கள் அனைவரும் பர்மாவில் குடியேறி பல தலைமுறை தலைமுறையாக அந்த நாட்டைச் சீர்படுத்துவதில் முன்னணியில் நின்றவர்களாவர்.

நேற்று 78-வது முறையாக 1,470 பர்மிய அகதிகள் சென்னை வந்திறங்கினர்; இவர்களில் பாதிக்கு மேற்பட்டோர் (770) குழந்தைகளாவர்; சுமார் 500 பேர் பெண்கள்—மற்றவர்கள் ஆண்கள்.

இவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்; இப்போதுதான் தமிழ் மண்ணை மிதிக்கின்றனர்!

இத்திங்கள் 16-ம் நாளும், 27-ம் நாளும் இரண்டு கப்பல்கள், அகதிகளை ஏற்றிக்கொண்டு சென்னைக்கு வரவிருக்கின்றன.

நேற்று வந்தவர்களில் 820 பேர் கும்மிடிப்பூண்டி முகாமுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர்; இவர்கள் எந்தெந்த மாநிலங்களுக்குச் செல்ல விரும்புகிறார்களோ அந்தந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைக்க சென்னை கலெக்டர் ஏற்பாடுகள் செய்துள்ளார்.

கருநாடக மாநில தி. மு. க. தேர்தல் முடிவுகள்

6—10—68-ல் பெங்களூர் பலலேசுவரம், நியூ கிருஷ்ண பவனில் தலைமைக் கழக ஆணையாளர் திரு. நீலநாராயணன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கருநாடக மாநில தி. மு. க. தேர்தல் முடிவுகள் வருமாறு:—

அவைத் தலைவர்:
வே. இளஞ்சேரன்

மாநில அமைப்பாளர்:
தி. திராவிடமணி

துணை அமைப்பாளர்:
ந. இராமசாமி

பொருளாளர்:
எச். விட்டல்

பொதுக்குழு உறுப்பினர்கள்:
த. வேதகுமார்
ஆ. மனோகரன்
மு. அதியமான்
கு. அண்ணாமலை
வி. கே நடேசன்
ம மன்னர்
வி. பி சண்முகம்
தே. மோ. மாணிக்கம்
மு. சுப்பிரமணி

சென்னை 98-வது வட்ட வாக்காளர்கட்கு:

சென்னை 98-வது வட்ட வாக்காளப் பெருமக்களுக்கு, சிற்பக் கலைத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. இராமசாமி ஆச்சாரி தெரிவிப்பதாவது:—

"எங்கள் சங்கத்தின் சார்பில், மாநகராட்சித் தேர்தலில் போட்டியிட திரு. கை. பிரம்மையாவுக்கு வாய்ப்பளிக்குமாறு தி. மு. கழகத்திடம் கேட்டும் கொடுக்கப்படாததால் சுயேச்சை வேட்பாளர் பக்கிரி என்பவரை ஆதரிக்கப்போவதாக யாரோ ஒரு துண்டறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். அந்தத் துண்டறிக்கைக்கும் எங்களுக்கும், கை. பிரம்மையா அவர்கட்கும் சம்பந்தமில்லை என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலானவர்கள், கிழக்குப் பாகிஸ்தான் துறைமுகமான சிட்டகாங்குக்கு அனுப்பப்படுவார்களாம்.

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-12) அச்சிட்டு [illegible]